**மார்ச் – 19**

**"நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தமாயிருங்கள்." - 1பேது 1 : 14,15.**

தேவன்தான் எல்லா உருவாக்குதலையும் செய்கிறார் என்றும், பிள்ளைகள் அவருடைய கரங்களில் வெறுமையாகச் செயலற்று இருக்கிறார்கள் என்றும், சில கிறிஸ்தவர்கள் தப்பான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பரி.பேதுரு அவ்விதமாகச் சொல்லவில்லை. தெய்வீகப் போதனைகளுக்குத் தக்கதாக நம்மையே உருவாக்கிக்கொள்ள அவர் புத்தி சொல்லுகிறார். நம்மிலும், நம்மை சுற்றிலும் செய்யப்பட வேண்டிய வேலை இருக்கிறது. எழுந்து செய்யாமல், ஆனால் செயலற்றவர்களாய் உட்கார்ந்து கொண்டு, கர்த்தர் தங்கள் சார்பாக அற்புதங்களை செய்யக் காத்துக் கொண்டிருக்கிறவர்கள், மிகவும் அதிகமாக ஏமாற்றப்பட்டு, சத்துருவுக்குத் தங்கள் மேல் சாதகமான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கிறார்கள். பயத்தோடும், நடுக்கத்தோடும் அவர்கள் தங்களுடைய இரட்சிப்பை நிறைவேற்ற சுறுசுறுப்புக் கொண்டாலொழிய, அவன் அவர்களை கையுங்காலும் கட்டிக்கொண்டு போய், புறம்பான இருளிலே போட அந்த சூழ்நிலையை நிச்சயமாக உபயோகிப்பான். **- Z ’03, 55 (R 3150).**

நாம் முன்னே சாத்தானுடைய ஊழியக்காரராக இருந்து நமது நடத்தையை பாவத்தினாலும், தன்னையத்தினாலும், உலகத்தனத்தினாலும், அறிவீனத்தினாலும், வஞ்சகத்தினாலும் ஆண்டு கொண்டிருந்தோம். இப்பொழுதோ, தேவனுடைய பிள்ளைகளாக பரிசுத்தமாயிருக்கும் அவருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிவோம். ஞானம், நீதி, அன்பு, வல்லமை கலந்த அவருடைய பூரண சித்தம், இருதயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் போது, அவருடைய சொந்தக் குணத்திற்கு ஒப்பாக அவருடைய பிள்ளைகளை மாற்றுகிறது. பழைய குணத்திற்கும், புதிய குணத்திற்கும் ஊடே உள்ள வித்தியாசம் இரவுக்கும் பகலுக்கும் ஊடே உள்ள வித்தியாசத்தை விட அதிகமானது. **- P ’36, 31.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

கலா 4:6; 3:26; ரோம 12:2; 8:14-16; 1பேது 4:2; 1யோவா 2:15; 3:3; லூக் 1:74,75; எபே 2:10; 1கொரி 2:12; 6:9-11; 2கொரி 7:1; 1தெச 4:7; எபி 12:14; 2பேது 3:11; கொலோ 1:22; லேவி 11:44; 19:2;

**கோபுர வாசிப்பு : Z ’14, 184 (R 5481).**

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவம் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவற்றின் பலன் என்ன?